# 20

# மரணம்



# DEATH

# 20

## எப்படி மரணமடையக்கூடாது?

HOW NOT TO DIE

**1**

மனந்திரும்புதலைத் தள்ளிப்போடக்கூடாது.

**2**

யார்மீதும் கசப்பு வைத்திருக்கக்கூடாது.

**3**

உங்கள் செல்வத்தைச் சார்ந்திருக்கக்கூடாது.

**4**

நெருங்கியவர்களைக் குழப்பத்தில் விட்டுச்செல்லக்கூடாது.

**5**

மனத்தொய்வுக்கு இடங்கொடுக்கக்கூடாது.

**6**

தற்கொலை செய்ய நினைக்கவே கூடாது.

**7**

சோம்பலுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது.

**8**

பரிசுத்தப்படுத்திக்கொள்ளுதலை நிறுத்திவிடக்கூடாது.

**9**

மரண பயத்தினால் பீதியடையக்கூடாது.

**10**

நம்பிக்கையில்லாமல் துக்கிக்கக்கூடாது.

## 20

## எப்படி மரணமடையக்கூடாது?

### அறிமுகவுரை

- மரணம்: சற்றும் விரும்பப்படாத தலைப்புகளில் ஒன்று.

ஆனால் —

மரணத்தைவிட நிச்சயமானது ஒன்றுமில்லை;
மரண நேரத்தைவிட நிச்சயமற்றதும் ஒன்றுமில்லை.

இறப்பு என்பது வாழ்வில் நிகழ்ந்தே தீரும்.
பிறப்பிலிருந்து இறப்பிற்குப் பயணம்தானே வாழ்வு?

- C.H. ஸ்பர்ஜன் (1834-1892), பிரசங்க வேந்தன்:

''மரணத்திற்காய் ஆயத்தப்படாதவன் சாதாரண
முட்டாளல்ல; அவன் ஒரு கிறுக்கன்!''

- ஜான் நியூட்டன் (1725-1807), அடிமையொழிப்புப் போராளி:

''இறப்போருள்ள நாட்டில் இருக்கிறோம்;
இறப்பேயில்லாத நாட்டில் ஒரு நாள் இருப்போம்!''

யோசுவா இதை இப்படிச் சொன்னான் —

*''மண்ணோர் எல்லாரும் செல்லும் வழியே போகிறேன்''*
யோசு 23:14அ

- மார்டின் லூத்தர் (1483-1546):

''எவனும் இரு காரியங்களைத் தனித்தே செய்யணும்:
தனித்தே விசுவாசிக்கணும்,
தனித்தே உயிர்விடணும்!''

- கிறிஸ்து நமது பாவங்களைச் சுமந்தார்;
இதை விசுவாசிப்பது இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை நமக்கருளுகிறது
(1 பேது 2:24)

கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசித்தார்;
இதை விசுவாசிப்பது தைரியமாய் மரணத்தை எதிர்நோக்க
நம்மை ஆயத்தப்படுத்துகிறது (எபி 2:9)

- இறப்புதான் முதல் உயிர்க்கொல்லி!
எவ்வளவு காலம் வாழ்வோமென்று எவரும் அறியாததால்,
எப்பொழுதென்றாலும் மரிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

மேத்யு ஹென்றி (1662-1714), வேத வியாக்கியானி:
''நமது இறுதி நாளுக்காக
ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படவேண்டும்!''

- மரணமென்பது மனுக்குலத்தின் எதிரியாயினும்,
அது பல நன்மைகளை விளைவிக்கிறது.
அதிலொன்று சமுதாயத்தில் மக்களுக்கிருக்கும்
வேறுபாடுகளை அழிப்பது:
— *அடிமை* vs. *முதலாளி* (யோபு 3:19)
— *ஞானி* vs. *மூடன்* (பிர 2:16)
— *நல்லவன்* vs. *தீயவன்* (பிர 9:2)

- Dr. நெல்சன் பெல் (1894-1973), சீனாவுக்கு மிஷனரி,
பண்டிதர் பில்லி கிரஹாமின் மாமனார்:

''இறக்க ஆயத்தமுள்ளோரே
இருக்க ஆயத்தமுள்ளோர்!''

- மரணத்தை பைபிளும் உலகும் வெவ்வேறு கோணங்களில்
பார்க்கின்றன; எனவே இத்தலைப்பில் நாம் களைய வேண்டிய
தவறான கருத்துக்கள் நிறையவுண்டு.

எனவேதான், *எப்படி மரணமடையக்**கூடாது**?*

## எப்படி மரணமடையக்கூடாது?

### 1. மனந்திரும்புதலைத் தள்ளிப்போடக்கூடாது.
Do not postpone repentance.

- ஒரு வாசகம்:

  "11 மணிக்கு மனந்திரும்பலாம் என்றிருக்காதீர்;
  10.30 மணிக்கே மரித்துவிடலாம்!"

  அந்தச் சிலுவைக் கள்ளனை சிலர் மேற்கோள் காட்டுவர்;
  அவ்வித வாய்ப்பு கிடைப்பதோ அரிதிலும் அரிது—
  லூக் 23:39-43

  என்று இறப்போமென்று நம்மால் நியமிக்க முடியாதென்பதே
  திருமறைப் போதனை —

  பிர 8:8அ ... *ஆவியை விடாதிருக்க ... அதிகாரமில்லை*

- மூன்றுவித மரணங்களை விவிலியம் குறிப்பிடுகிறது —

  □ ஆன்மீக மரணம் (Spiritual death)
  ஆதி 2:16,17 ... *சாகவே சாவாய் ...*
  ரோ 6:23 ... *பாவத்திற்குக் கூலி சாவு ...*

  இது இறைவனோடுள்ள உறவில் முறிவு.
  இந்த மரணம் மனுக்குலம் அனைத்தின்மீதும் வந்துவிட்டது —
  *"எல்லாரும் பாவம் செய்து ..."* (ரோ 3:23)

  □ உடலுக்கடுத்த மரணம் (Physical death)
  பாவம் செய்த அன்றே ஆதாம் ஆன்மீக மரணமடைந்தான்;
  அவனது உடலின் மரணம் தொடர்ந்தது.
  ஆதி 3:19 ... *மண்ணுக்குத் திரும்புவாய்*

  இது உடலிலிருந்து ஆவியும் ஆன்மாவும் பிரிவதாம்.
  அதாவது, சரீர வாழ்வின் முடிவு.

  □ நித்திய மரணம் (Eternal death)
  இது *"இரண்டாம்" மரணம்* என்றும் அழைக்கப்படுகிறது.
  வெளி 20:13-15; 21:8
  ... *மரித்தோரை ஒப்படைப்பு ... தீர்ப்பு ... தீக்கடல் ...*

இது கடவுளிடமிருந்து என்றும் பிரிக்கப்பட்டு தீக்கடலில் வேதனை.

- தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பிக் கிறிஸ்துவை விசுவாசித்து அவரது திருவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன் இரண்டாம் மரணத்திற்குத் தப்புவான் —

    யோ 8:51 ... *மெய்யாகவே ... மரணத்தைக் காண்பதில்லை*

அவனது பெயர் நித்திய வாழ்வுப் பதிவேட்டில் பதிவாகிறது.
இதுவே ''மறுபிறப்பு'' என்பது!

ஒரே முறை பிறந்தால் இரு முறை மரணம்;
இரு முறை பிறந்தாலோ ஒரே முறை மரணம்!

- அப்படியானால், எப்பொழுது மனந்திரும்பவேண்டும்?

    *''இப்பொழுதே!''*

— அப் 17:30 ... *எல்லாரும் மனந்திரும்ப* ***இப்பொழுது*** *கட்டளை ...*
:31 ... *பின்பு நியாயத்தீர்ப்பு ...*

— எப்பொழுது மனந்திரும்பவேண்டுமென்று சாலொமோன் நடைமுறை ஞானத்தில் சொன்னது —

பிர 12:1-7 ... *உனது வாலிப நாட்களில் ...*
குன்றும் பலம், மங்கும் பார்வை, நடுங்கும் கரங்கள், முடக்குவாதம், மறதி, மந்தமாகும் காதுகள், தனிமை, தொடர்ந்து பலங்குன்றுவதால் பயம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறான்!

ஏற்கனவே வயதாகிவிட்டதென்று எண்ணாதீர் —

நாளைக்கு இருக்கப்போவதைவிட இன்று இளமைதானே?

ஒரு வயோதிபர் இரட்சிக்கப்பட்டால்,
அவரது ''ஆன்மா'' மட்டுமே காப்பாற்றப்படுகிறது;
ஒரு வாலிபன் இரட்சிக்கப்பட்டாலோ,
ஆன்மாவோடு ''வாழ்நாளும்'' காப்பாற்றப்படுகிறது!

ஆனாலும், இழந்த ஆண்டுகளைச் சரிசெய்யக் கடவுளால் முடியும் (யோவேல் 2:25)

■ மனந்திரும்புதலைத் தள்ளிப்போடக்கூடாதென்பதற்கு இன்னொரு காரணம், வாழ்நாள் குறுகியது!

''குறுகிய வாழ்வை'' விவிலியம் பலவிதங்களில் சித்தரிக்கிறது —

யோபு 7:6 ... *நெய்கிறவனின்* ***ஓடு கட்டையிலும்*** *வேகம்* ...
சங் 90:5ஆ, 6 ... *காலை முளைத்து மாலை உலரும்* ***புல்***
சங் 144:4 ... *கடந்துபோகும்* ***நிழல்***
யாக் 4:14 ... *விரைவில் மறையும்* ***புகை***

■ வயது சென்ற பின்னரே இறப்போமென்று நாம் பொதுவாக எண்ணுவதுண்டு;

''திடீர்'' மரணமோ எவ்வளவு சகஜம்!
''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு!''

அதற்கான காரணங்கள்—

☐ விபத்துக்கள்

லூக் 13:4 ... *சீலோவாமின் கோபுரம் விழுந்து 18 பேர் பலி*
:5 ... ''நீங்கள் மனந்திரும்பாவிட்டால் ...''

☐ இயற்கையின் சீற்றங்கள்

*பூமியதிர்வுகள்* (மத் 24:7ஆ) ... *''ஒரு சில இடங்களில் மட்டுமல்ல, அநேக இடங்களில் ...''*
(உ-ம்) சுனாமி

☐ மரண வியாதியைத் திடீர் கண்டுபிடிப்பு ...

மாரடைப்பு, புற்றுநோய், ...

■ மனந்திரும்புதலைத் தள்ளிப்போடுவோர்க்கு எச்சரிக்கை —

நீதி 29:1 ... *அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் ... திடீர் அழிவு*

கடவுள் தமது வாளைத் தினமும் தீட்டிக்கொண்டேயிருக்கிறார் —

சங் 7:11,12 ... *கடவுள் ... சினம் ... வாள் ... வில் ...*

■ இறந்தபின் இன்னொரு வாய்ப்பிருக்கும் என்றெண்ணியும் சிலர் மனந்திரும்புதலைத் தள்ளிப்போடுகின்றனர் —

1 பேது 3:19,20ஐ மேற்கோள் காட்டுவர்.

— உயிர்த்தெழுதலுக்குப்பின் பரமேறுமுன் பூவுலகின் அடிப்பகுதிகளுக்குக் கிறிஸ்து இறங்கிச்சென்ற அபூர்வச் சம்பவமிது.

— *''பிரசங்கித்தார்''*
பிரசங்கித்தல் என்றால் வாக்கறிவிப்பாகவோ, தண்டனையறிவிப்பாகவோ இருக்கலாம்!
நோவா காலத்து வெள்ளத்தின் பேரழிவைக் கீழ்ப்படியா ஆவிகளுக்கு ஆண்டவர் நியாயப்படுத்தினார் என்றே இப்பகுதியில் தோன்றுகிறது.

திருமறையின் தெளிவான போதனையோ —

எபி 9:27 ... *மரணம் ... தீர்ப்பு ... நியமிப்பு ...*

பரலோகிலிருந்து நரகத்திற்கோ, நரகத்திலிருந்து பரலோகிற்கோ போக முடியாத அளவு *''பெரும் பிளவு''* என்றான் ஆபிரகாம்! (லூக் 16:26)

■ இன்றே மனந்திரும்புங்கள்!

— சென்றடைய ஒரு பரலோகம்; வெறுத்திட ஒரு நரகம்!
— நாளையென்றால் பிந்திப்போகலாமே!
— கடவுளுக்குச் ''சரி,'' பிசாசுக்கு ''இல்லை'' என்றிடுங்கள்!
— முடிவான அழைப்பு: 2 கொரி 5:10 ... *நியாயாசனம்*
:20,21
*எனவே, கடவுளோடு ஒப்புரவாகுங்கள்!*

(பார்க்க: பக்கங்கள் 40-42)

## 2. யார்மீதும் கசப்பு வைத்திருக்கக்கூடாது.
Do not hold bitterness against anyone.

- ஒருவர் இப்படிக் கேட்டார்—
  ''இறப்பு என்றொன்று இருக்கும் இவ்வுலகில்
  வெறுப்பு என்பதற்கு நேரமெங்கே?''

- மனந்திரும்புதலைத் தள்ளிப்போடக்கூடாதென்று
  முந்திய அத்தியாயத்தில் படித்ததுபோல,
  மனிதரோடு ஒப்புரவாகுதலையும் ஒத்திப்போடக்கூடாது —

  ☐ மரிக்கும்போது கர்த்தரை முகமுகமாய்க் *''காண''* இருக்கிறோம் —
  எபி 12:14,15 ... *சமாதானம் ... கசப்பு ... தரிசிப்பு*

  சில நபர்களோடு சமாதானமாயிருப்பது நமக்கு முடியவே இல்லை
  என்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கலாம்;
  ஆனாலும் கர்த்தரைச் சந்திக்கப்போகிறோமென்பதே
  ஒப்புரவாகுதலுக்கு நம்மை உந்தித்தள்ளவேண்டும்.

  ☐ பலிபீடம் என்பது இன்றைய இறைப்பிரசன்னத்தைக் குறிக்கிறது;
  விரைவில் ''எழுத்தின்படியான'' இறைப்பிரசன்னத்தில்
  நுழைவோம் —
  மத் 5:23,24 ... *பலிபீடத்தின்முன் ... முன்பு ஒப்புரவாகி ...*

- ''மன்னிக்கப்பட்டோர்'' நிறைந்த நாடுதான் பரலோகம்!
  அதாவது, பரலோகிற்குள் எவருக்கும் அனுமதி கிடைப்பது
  ''மன்னிக்கப்பட்டவர்'' என்பதாலேயே!
  நாம் மன்னிக்கப்பட்டிருக்க,
  மன்னியாது எவரையும் விட்டுச்செல்லலாமோ?

  ☐ இயேசு: மரித்துக்கொண்டிருக்கையில் முதல் கூற்று —
  லூக் 23:34 ... *பிதாவே, இவர்களை மன்னியும் ...*

☐ ஸ்தேவான்: மரணமடையும்போது —

அப் 7:60 ... *இவர்கள்மீது இப்பாவத்தைச் சுமத்தாதிரும்* ...

*''உரத்த சத்தம்''* — சாதாரணமாயல்ல!

☐ 13ஆம் நூற்றாண்டின் புனித பிரான்சிஸ்:

''பிறரை மன்னிப்பதிலேயே நமக்கு மன்னிப்பு;
மரிப்பதிலேயே விண்வாழ்வுக்குள் பிறப்பு!''

☐ விண்ணிலுள்ள பரிசுத்தரின் *''சர்வ சங்கத்தை''* எழுத்தின்படியே சென்றடையவிருக்கிறோம்;
கசப்புடன் அங்கு எவரையும் சந்திக்கமுடியுமோ?

எபி 12:22-24 ... *சர்வ சங்கம் ... நீதிமான்கள்*

(= மன்னிக்கப்பட்டோர்)

''ஞாபகங்கள்'' அங்கு இருக்கத்தான் செய்யும்!

செல்வந்தனிடம் ஆபிரகாம்...*''நினைத்துக்கொள்''* (லூக் 16:25)
பரலோகம்: ஆச்சரியம் நிறைந்த நாடு! (மத் 8:11,12)
எதிர்பார்த்தோர் இரார் ... எதிர்பாராதோர் இருப்பர்!

■ மக்களிடம் ''அன்பு'' என்பதையும் நமது வாழ்வின் ''முடிவு'' என்பதையும் திருமறை அடிக்கடி இணைத்துப் பேசுகிறது —

முடிவு என்பது இறப்போ, இரண்டாம் வருகையோ,
எது முந்துகிறதோ அது —

☐ அப் 24:15,16 ... *உயிர்த்தெழுதல் ... நல் மனச்சாட்சி*
☐ பிலி 4:5 ... *சாந்தகுணம் ... கர்த்தர் சமீபம்*
☐ யாக் 2:13 ... *இரக்கம் ... நியாயத்தீர்ப்பு ...*
☐ 5:9 ... *முறையீடு ... வாசலில் நியாயாதிபதி ...*
:8ஆ ... *கர்த்தர் வருகை சமீபம்*
☐ 1 யோ 4:17 ... *அன்பு ... தீர்ப்பு நாளில் தைரியம்*

வாழ்வின் முடிவில் அநேகரது மனவருத்தம்:

''நான் பிறரை இன்னுமதிகம் நேசித்திருக்கவேண்டும்!''

■ சண்டைகள், பிரிவினைகள் தேவ மனிதரிடம் இருக்கத்தான் செய்தன; அவர்களது வாழ்வின் முடிவுக்கு வரும்போதோ இதயங்கள் இளகி ஒருவரோடொருவர் ஒப்புரவாயினர் —

☐ ஏசாவுடன் ஒப்புரவாக யாக்கோபு முதலடி எடுத்துவைத்தான் —

ஆதி 32:3 ... *யாக்கோபு தூதுவரை அனுப்பினான்*

:6 ... *ஏசாவும் சந்திக்கப் புறப்பட்டு வந்தான்*

யாக்கோபின் இம்முயற்சியை அடுத்துதான், பெனியேலில் தேவன் அவனுக்கு விண்தரிசனம் அருளினார் (வச 24-32)

☐ யோசேப்பும் சகோதரரும் ஒப்புரவானது இன்னோர் அழகான காட்சி —

ஆதியாகமம் 45 வாசியுங்கள் ...

வச 2 ... *யோசேப்பு சத்தமாய் அழுதான்*

வச 5 ... கோபம், கசப்பு, பழிவாங்குதல் எதுவுமில்லை.

இந்த ஒப்புரவாகுதலினால் யோசேப்பின் குடும்பம் பஞ்சத்தில் பாதுகாக்கப்பட்டது; மட்டுமல்ல,
இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்கான தீர்க்க வார்த்தைகளை யாக்கோபு கூறுவதற்கும் வழியுண்டாயிற்று (அத் 49) —
பின்னர் அவன் மரித்தான் (வச 33).

யோசேப்பு தன் சகோதரரிடம் கசப்புடன் நடந்துகொண்டிருந்தால் இக்கதை எப்படி முடிந்திருக்கும், சிந்தியுங்கள்!

☐ பவுலின் இரண்டாம் மிஷனரிப் பயணத்தின்போது மாற்குவைக் குறித்துப் பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையே பிளவு.

நாளாவட்டத்திலோ பவுலின் மனம் கனிந்ததால் இறுதியில் அவர்களைப் பாராட்டி எழுதினான் —

2 தீமோ 4:6 ... *நான் பிரியும் காலம் வந்தது*

:11 ... *மாற்கு எனக்குப் பயனுள்ளவன்*

கொலோ 4:10... *பர்னபாவுக்கு இனத்தான் மாற்கு*... வாழ்த்துதல்

நமது வயது கூடக்கூட நமது இதயங்கள் விசாலமாகிக்கொண்டே
இருக்கவேண்டும் — (எசேக் 41:7) புதிய ஆலயம்
*... கட்டிடத்தின் அகலம் வர வர அதிகம் ...*

- இறுதியில் ஒப்புரவாகுதல் இறையாசியைக் கொண்டுவந்தாலும்,
நெடுகவே அன்பைக் காத்துக்கொள்வதே சாலச் சிறந்தது —
  - தாவீதும் யோனத்தானும் —
  தாவீதை யோனத்தானின் தந்தை வேட்டையாடுவதுபோல்
  துரத்திக்கொண்டிருந்தாலும்!
  - இயேசுவும் சீடரும் (யோ 13:1) —
  அவர்களது நடவடிக்கைகள் இளக்கரிக்கச் செய்வதாயிருந்தாலும்!
  *... முடிவுவரை அவர்களிடம் அன்பு வைத்தார் ...*

பிறருக்காய் உயிர்விடவும் ஆயத்தமாகும் அளவிற்கு
அன்பு வளர்ந்தவண்ணமிருக்கவேண்டும்—

1 யோ 3:16 ... *அவர் போல்... சகோதரர்க்காய் உயிர் கொடுக்க ...*

1996இல் எனது இருதய அறுவை சிகிச்சையின்போது,
சில நண்பர்கள் இவ்விதம் வேண்டினர் —
''ஆண்டவா, என்னை எடும்; அண்ணனை விடும்!''

- உடலின் பல நோய்களுக்கு மனநிலைக் காரணங்களுண்டு —
முக்கியமாக: கோபம் / கசப்பு / மன்னியாமை
ஏற்கனவே முதிர்வயதின் நோய்கள் பல;
அவற்றோடு இன்னும் கூட்டுவானேன்?
(1 பேது 3:10,11; சங் 34:12-16)
*... நல்ல நாட்கள் ... நாவு ... தீவினை ... கபடு ...*

- முடிவாக ஒரு சிந்தனை:
நமது வாழ்வின் துவக்கமும் முடிவும் முறையே
உதயத்திற்கும் அஸ்தமனத்திற்கும் இணையானவை.
மனக்கசப்பில் நமது வாழ்வு அஸ்தமிக்கவேண்டாம் —
எபே 4:26 ... *அஸ்தமனத்திற்குமுன் எரிச்சல் தணியட்டும்.*

(பார்க்க: பக்கங்கள் 38-39, 98-100, 198-201, 255-258)

## 3. உங்கள் செல்வத்தைச் சார்ந்திருக்கக்கூடாது.
Do not depend on your wealth.

- மரணத்துடன் செல்வத்தை விவிலியம் அடிக்கடி இணைக்கிறது —

  1 தீமோ 6:7 ... *கொண்டுவந்தது ... எடுத்துச் செல்வது ...*

  சம்பத்தையெல்லாம் இழந்தபோது யோபு சாட்சியிட்டது —

  யோபு 1:21அ ... *நிர்வாணியாய் வந்தேன் ... நிர்வாணியாய் ...*

  மன்னன் சாலொமோன் கண்டறிந்ததும் இதுவே—

  பிர 5:15 ... *ஒன்றையும் எடுத்துக்கொண்டு போவதில்லை ...*

  உலகறிந்தது: கூடுவிட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன?

- செல்வம் **வைத்திருப்பதற்கு** பைபிள் எதிரல்ல;

  அதில் **சார்ந்திருப்பதற்கோ** எதிராய் எச்சரிக்கிறது —

  1 தீமோ 6:17 ... ***நிலையற்ற*** *செல்வத்தை நம்பாது ...*

  ***நித்திய*** *கடவுளையே நம்பி ...*

  செல்வத்தை நம்புவது ''மதியீனம்'' —

  லூக் 12:15-21 ... *பொருளாசை ... மதிகேடனே!* (வச 20)

  — செல்வத்தில் நம்பிக்கை (வச 19)

  — கடவுளது கடிந்துகொள்ளல் (வச 20)

- மாறாக, செல்வந்தராயிருந்தும் செல்வத்தின்மீது சாராத நல்ல எடுத்துக்காட்டுகளும் உண்டு —

  □ ஆபிரகாம்

  ஆதி 24:35 ... *பேராசீர்வாதம் ... பொன் ... வெள்ளி*

  அவனது இதயமோ அதிலிருக்கவில்லை —

  எபி 11:9 ... *பரதேசிபோல் அலைந்து திரிந்தான்*

  :10 ... *கடவுளே கட்டிய நகருக்காய்க் காத்திருந்தான்*

  :16 ... ''அதிசயமான ஒளிமய நாடாம்!''

☐ யோபு

யோபு 1:3 ... *கீழைநாட்டவரில் மிகப்பெரிய செல்வந்தன்*

(இந்தியாவில் முகேஷ் அம்பாணி போல்)

அவனோ செல்வத்தைக் கும்பிடவில்லை —

யோபு 31:24-28 ... *பொன்மீது நம்பிக்கை ... கைகளை முத்தம்*

(''காசேதான் கடவுளடா'' என்பது அபத்தம்!)

☐ அரிமத்தியனாகிய யோசேப்பு

மத் 27:57 ... *செல்வந்தன்*

அவனோ *இறையரசையே நோக்கியிருந்தான்* —

மாற் 15:43

தனக்கென்றே வெட்டிய கல்லறையில்கூடப் பற்றில்லை —

மத் 27:60

இயேசுவுக்கு அதையும் கொடுத்துவிட்டான்.

■ செல்வம் கொழிக்குமளவு கடவுள் நம்மை ஆசீர்வதிக்கலாம்;

நாமோ அதில் மனதை வைக்கக்கூடாது (சங் 62:10ஆ)

பணம் நம்மிடமா, நாம் பணத்திடமா?

— இதுதான் கேள்வி!

இதை எப்படிக் கண்டுபிடிப்பது?

நமது மனதில் ஓடிக்கொண்டேயிருப்பது எது?

நமது கவனமெல்லாம் எங்கே?

பிலி 3:18-21 ... *வயிறு ... இகத்துக்கடுத்தவை ...*

*தாய்நாடாம் விண்ணக நினைப்பில்லை ...*

■ ''செல்வம், மரணம்'' — இவை குறித்த அறிவுரைகள் —

☐ அளவுக்குமீறிச் செல்வம் சேர்க்காதீர்.

மத் 6:19-21 ... *பூவுலகில் பொக்கிஷம் ... பரலோகம் ... இதயம்*

*''பொக்கிஷம்''* — வாழ்க்கைக்குத்

தேவையானதற்கும் மிஞ்சிச் சொத்துக்குவிப்பு

இது நம்மை அகம்பாவத்திற்குள் நடத்தும் —

யாக் 4:13-16 ... *வாங்கி ... விற்று ... லாபம் ... புகை*

வாழ்வின் முடிவு அத்துடன் காலத்தின் முடிவுக்குள் வருகையில்,
நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டியது—

''செல்வம் குவிப்பதற்கு இதுவா காலம்?''
2 இரா 5:26ஆ ... கேயாசியிடம் எலிசாவின் கேள்வி

போதுமெனும் மனதே மிகுந்த *''ஆதாயம்''* (1 தீமோ 6:6-8)
எவ்வளவுதான் போதும்?

☐ தேவையுள்ளோருக்குத் தாராளமாய்க் கொடுங்கள்.
பரிசுத்தவாட்டி Corrie Ten Boom (1892-1983) சொன்னது:
''வாழ்வை அளப்பது காலமல்ல, தானம்!''
(Life measured not by its duration but by its donation!)

செல்வந்தருக்குப் பவுலின் தீர்க்கமான கட்டளை —

1 தீமோ 6:17-19 ... *நற்செயல்களில் செல்வந்தர் ...*
*தாராளம் ... உதாரத்துவம் ... அடித்தளம் ...*

மனிதன் வாழும்போது எதைக் கொடுத்துவிட்டானோ
அதைத்தான் சாகும்போது கையில் பிடித்திருப்பான்!

**நமக்கிருப்பதையெல்லாம்** சாகும்போது விட்டுச் செல்கிறோம்;
**கொடுத்ததையெல்லாம்** எடுத்துச் செல்கிறோம்!

பகிரப்படாத செல்வம் நமக்கே கேடு — பிர 5:13 ... *கொடிய தீங்கு*

அச்செல்வந்தன் நரகம் சென்றதேன்?
களவா? கொலையா? விபச்சாரமா? இல்லை!
பிச்சைக்காரன் லாசருவைக் கவனிக்கவில்லை,
அவ்வளவுதான் (லூக் 16:19-31)

உங்கள் செல்வத்தால் எளியவரை உயர்த்துங்கள் —

யாக் 1:9-11 ... *தாழ்நிலை ... உயர்வு ...*

உங்கள் செல்வம் ஊழலால் சம்பாதிக்கப்பட்டதெனில்,
ஏமாற்றப்பட்டவரிடம் முறையாக அது திருப்பித்தரப்படவேண்டும்;
அல்லது எளியவருக்குப் போய்விடவேண்டும் —

யாக் 5:1-5இன் செய்தி இதுவே ... *தங்கம் ... வெள்ளி ... அநியாயமாய்*
(வச 4)

■ முடிவான ஆலோசனை:

உங்களிடம் பணமிருந்தால்,
அது பிணத்தின்மீது தூவிய மலர் போலிருக்கட்டும் —

கொலோ 3:1-3 ... *மரித்தீர்கள் ... மேலுள்ளவை ... கீழுள்ளவை*
செத்தவன் அம்மலர்களை முகர்வானோ?

பாடுங்கள்: *This world is not my home!*

*பரலோகமே, என் சொந்தமே,*
*என்று காண்பேனோ?*
*என் இன்ப இயேசுவை என்று காண்பேனோ?*

*இயேசு என் நம்பிக்கையாம்;*
*இந்தப் பூமியும் சொந்தமல்ல;*
*பரிசுத்த சிந்தையுடன்*
*இயேசுவைப் பின்பற்றுவேன்!*

எபி 13:14 ... *நமக்கு நிலையான நகர் இங்கில்லை ...*
*வரவிருக்கும் நகரை நாடித் தேடுகிறோம்!*

(பார்க்க: பக்கங்கள் 52-54, 104-106, 439-440, 563-565, 676-679)

## 4. நெருங்கியவர்களைக் குழப்பத்தில் விட்டுச்செல்லக்கூடாது.
Do not leave your dear ones in confusion.

■ இளைஞருக்கும் முதியோருக்கும் மரணம் பொதுவாயினும், இங்கு நாம் ''வயோதிபர்'' அல்லது ''மூத்த குடிமக்களிடமே'' கூடுதல் பேசுகிறோம்.
எசேக்கியாவிடம் தேவன் சொன்னதில் துவங்குவோம் —
2 இரா 20:1 ... *மரண வியாதி ... வீட்டை ஒழுங்குபடுத்தும்*

ஏசா 38:1இலும் இதே வார்த்தைகள்.
இச்சம்பவம் விரிவாய்த் தரப்பட்டுள்ள
ஏசாயா 38 முழுவதையும் வாசியுங்கள்.

எசேக்கியா போல் மரண வியாதி உங்களைத் தாக்காதிருக்கலாம்; ஆனாலும் நடுவயதைக் கடந்து வாழ்வின் மாலைப்பொழுது நோக்கி நடக்கும் எவருக்குமுரிய செய்தியிது!

■ *''வீட்டை ஒழுங்குபடுத்துவது''* என்பது குறித்து சில நடைமுறைக் காரியங்களைக் கவனிப்போம் —

☐ வாழ்விறுதி விருப்பம் எழுதுதல் (Will)

இதை எழுதுவது விசுவாசக் குறைவல்ல
''மரண சாசனம்'' என்பது திருமறையில் நற்பிரயோகமே —
எபி 9:16,17 ... *மரண சாசனம் ... மரணம் ... உறுதிப்படும்*

— தனது தந்தையின் குடும்பத்தினர் அனைவருக்கும் யோசேப்பு ஏற்பாடுகள் செய்தான்
ஆதி 47:5,6 ... பார்வோனின் உத்தரவு
50:19-22 .. யோசேப்பின் வாக்குறுதி

— கடைசி மகனாயிருந்தும் தாவீது தனது பெற்றோருக்கு ஏற்பாடுகள் செய்தான்
1 சாமு 22:3,4 ... மிஸ்பாவில் குடியிருக்க ஏற்பாடு

— பிள்ளைகளுக்குப் பெற்றோர் சேமித்துவைக்க
பைபிள் போதிக்கிறது (2 கொரி 12:14ஆ)

— மரண சாசனம் எழுதுகையில் பாரபட்சம் காட்டாதீர்.
மகன்களுக்கும் மகள்களுக்கும் சமமாய்க் கொடுங்கள்.
சொல்லப்போனால், ஆணாதிக்கம் மிகுந்த நமது
சமுதாயத்தில் மகள்களுக்குக் கூடுதலாகவே தரவேண்டும்.
பெண்களுக்கு அநீதி மிகவும் சகஜம்.

— சாசனத்தில் இறையரசை மறந்துவிடாதீர்.
எல்லாமே பிள்ளைகளுக்கென்று வேண்டாம்.
அவர்களும் உழைத்து உயரட்டும்.
உங்கள் சம்பத்தை அந்திக்கிறிஸ்து பயன்படுத்த
விட்டுச் செல்லாதீர்.

எனது உயில்: மூன்றிலொன்று மகளுக்கு;
மூன்றிலிரண்டு இறைப்பணிக்கு, எளியவர்க்கு.

— சாசனம் எழுதுவதைக் கடத்திக்கொண்டேயிராதீர்.
தாமதத்தினால் ஈசாக்கின் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம்
தெரியும்தானே?

ஆதி 27:1,2 ... *முதிர்வயது ... பார்வை மங்கி ...*
ஏசா vs. யாக்கோபு

இக்குழப்பத்தைப் புரிந்துகொள்ள முழு அத்தியாயத்தையும்
வாசியுங்கள்.

☐ உறவுகளைக் குறித்துக் குடும்பத்தினருக்கு அறிவுறுத்துங்கள் —

— தமது விதவைத் தாய்க்கு யோவானை இயேசு கொடுத்தார்
யோ 19:25-27 ... தாயுடன் அவரது சித்தி இருந்தபோதிலும் ...
என்னே காட்சி!

— மறுமணம் குறித்து வாழ்க்கைத் துணைக்கு உத்தரவிடாதீர்;
அவர்களாகவே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

ஆணாதிக்கம் மிகுந்த யூத சமுதாயத்திலேயே
விதவைகளுக்குப் பவுல் சுதந்திரமளித்தான் —
1 கொரி 7:39 ... *தனக்கு விருப்பமான எவரையும்* ...

உயிர்த்தெழுதலில் தூதர் போலிருப்போம்;
மறுபடி சந்திப்போம், அவ்வளவுதான்; திருமணப் பந்தம் கிடையாது!

(7 சகோதரரை ஒருவர்பின் ஒருவராய் மணந்த பெண்ணைக் குறித்து வினவிய சதுசேயருக்கு இயேசு இதைப் போதித்தார் — மத் 22:23-30)

— வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப்பது குறித்து
மணமாகா பிள்ளைகளுக்குப் பொது அறிவுரை கொடுங்கள்;
யாரை மணக்கவேண்டுமெனக் குறிப்பிடாதிருங்கள்.

— மிஷனரிப்பணிக்கு அழைப்பு
உங்கள் மகனோ மகளோ கடவுளது அழைப்பிற்குக்
கீழ்ப்படியத் தடுக்காதிருங்கள்
*''மரித்தோரை மரித்திருப்போர் அடக்கம்பண்ணட்டும்''*
(லூக் 9:59,60)

☐ ''வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்'' என்பது
உங்கள் பிரேதத்தைக் குறித்தவற்றையும் உள்ளடக்கும்.

— உறுப்பு தானத்திற்கு முன்னதாகவே பதிவுசெய்துவிடுங்கள்.
எவருக்கோ பயனளிக்கக்கூடிய
உங்கள் கண்கள், நீரகங்களையெல்லாம் புதைப்பானேன்?
உறுப்பு தானப் பதிவு விபரங்களையும், இறந்தவுடனே
செய்யவேண்டியதையும் உங்கள் குடும்பத்தினருக்குச்
சொல்லிவையுங்கள்.

— தனது மனைவியிடம் ஒரு கணவன் சொன்னது:
''இயந்திரத்தினால் மட்டுமே நான் உயிரோடு வைக்கப்படும்
நிலை வந்தால், இயந்திரத்தை நிறுத்த மருத்துவரிடம்
சொல்லிவிடு!''

இதுவே ஞானம்! இதுவே முழு விளக்கம்!

கருணைக் கொலை செய்யலாமா? (Euthanasia)

விவிலிய விசுவாசிகள் பொதுவாக இதை எதிர்ப்பர்.
ஆனால், உச்ச அளவு தீவிர சிகிச்சைகளை நிறுத்தி
ஆளை இயல்பாய்ச் சாகவிடுவது தவறல்ல.

— அடக்கச் சடங்கு பற்றி ...

சரியாய்ச் சொன்னால், உடலை எரித்தாலும் புதைத்தாலும் ஒன்றே;
சுடுகாடோ இடுகாடோ சாம்பலுக்குச் சாம்பல்தான்,
மண்ணுக்கு மண்தான்!

யூதக் கலாச்சாரத்தில் எழுதப்பட்ட பைபிள் ''நல்லடக்கம்''
செய்வதைக் குறிப்பிடுகிறது.

எங்கே அடக்கம்?

யாக்கோபின் கட்டளை: ஆதி 49:29
உங்கள் விருப்பத்தைக் குடும்பத்திடம் சொல்லிவைக்கலாம்.
எனது மனைவியும் நானும் மகளிடம் சொல்லியுள்ளது:
''எங்கே வசதியோ அங்கே புதைத்துவிடு!''

கல்லறைக்கு அதிகம் செலவழிக்க வேண்டாமென்று
குடும்பத்தாரிடம் கண்டிப்பாய்ச் சொல்லுங்கள் —

ஏமி கார்மைக்கல்: ''பறவைகள் குளிக்க ஒரு கிண்ணம்!''
ஐடா ஸ்கடர்: ''எனக்குச் சிலை வைக்காதீர்!''

உயிரோடெழுப்ப, ஜெபித்துப் பார்க்க, இப்படியெல்லாம் சடலத்தை
வைத்துக்கொண்டிருக்கக்கூடாதென்று சொல்லிவையுங்கள் —
இவ்விதச் செயல்கள் கடவுளுக்கு எவ்வளவு அபகீர்த்தி!

☐ குடும்பத்தைக் கடனில் விட்டுச் செல்லாதீர்.
உயிரோடிருக்கும்போதே திருப்பிச் செலுத்திவிட முயலுங்கள்.

2 இரா 4:1-4இல் ஒரு தீர்க்கனின் விதவைக்கு நடந்தது
போன்ற அற்புதம் எப்பொழுதும் நடந்துவிடாது

*குடம் ... எண்ணெய் ... கடன்காரர் ...*

## 5. மனத்தொய்வுக்கு இடங்கொடுக்கக்கூடாது.
Do not give place to depression.

- வெவ்வேறு வாழ்க்கைப் பருவங்களைக் குறிப்பிடுகையில் —
  குழந்தைப் பருவ நினைவுகள்,
  வாலிபப் பருவ சோதனைகள்,
  முதிர் வயதின் ''பிரச்னைகள்'' என்போம்.

ஆம், முதிர் வயது எளிதானதல்ல —
சங் 90:10 ... *எழுபது ... எண்பது ஆண்டு ... சஞ்சலம்*
பிர 11:8 ... *அநேக ஆண்டுகள் ... இருளின் நாட்கள் அநேகம்*

எனவேதான் திருப்பாடகன் இவ்விதம் வேண்டினான் —
சங் 71:9 ... *முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதிரும்!*

- முதிர் வயதின் கவலைக்கும் மனத்தொய்வுக்குமான காரணங்கள் —

☐ குன்றிவரும் உடல் நலம்

2 கொரி 5:1-5 ... *கடவுள் கட்டிய வீடு*
***''தவிக்கிறோம்!''*** ... *விண்ணுலக வீடு*
... *வாழ்வுக்குரியது*
... *கடவுளால் ஆயத்தப்படுத்தப்பட்டோர்*
... *தூயாவியாகிய அச்சாரம்*
ரோ 8:18 ... *இன்றையப் பாடு ... வருங்கால மகிமை*
:23 ... *சரீர மீட்பு ... காத்திருந்து தவிப்பு*

இரட்டிப்பான ஆவி வரம் பெற்ற எலிசா கூட
வியாதிப்பட்டுத்தான் மரித்தான் (2 இரா 13:14அ).
அவனது எலும்புகள்கூட ஒருவனை உயிர்ப்பித்தன (வச 21)!

நித்தியக் கண்ணோட்டத்தில், பாடுகள் கொஞ்சக்காலம்தான் —
யோபு 14:1 ... *குறுகிய வாழ்நாள்*
16:22 ... *குறுகிய ஆண்டுகள்*

உபத்திரவங்கள் *''அதிசீக்கிரம்''* நீங்கவிருப்பதால்,
நாங்கள் *''சோர்ந்துபோவதில்லை''* —
2 கொரி 4:16,17

கிறிஸ்தவ தத்துவ ஞானி C.S. Lewis (1898-1963) —

''கடவுள் நமது இன்பங்களில் மெல்லிய ஓசையிலும்,
மனச்சாட்சியில் வழக்கமான குரலிலும்,
வேதனைகளிலோ உரத்த சத்தமாகவும் பேசுகிறார்!''

☐ குடும்பத்தில் பிரச்னைகள்

— முரட்டாட்டமான பிள்ளைகள்

(உ-ம்) சாமுவேலின் குமாரர்

1 சாமு 8:1-3 ... அவனது ஊழியத்தைத் தொடர்ந்தனர்;
ஆனால் ஊழலில் திளைத்தனர்.

தனது குடும்பத்தைச் சாமுவேல் அலட்சியப்படுத்தாதிருந்தும் ...
1 சாமு 7:15-17 ... *வீடு ... பலிபீடம் ...*

... தனது குமாரரை ஏலி தண்டியாததைக் குறித்துக்
கர்த்தரது வருத்தத்தை வெளிப்படுத்திய இருவரில்
சாமுவேல் ஒருவனாயிருந்தும் — 1 சாமு 3:13

இயன்றதையெல்லாம் செய்துவிட்டு மீதியைக் கடவுளிடம்
விடுங்கள். வயது வந்த பிள்ளைகளுக்கு அவர்களே பொறுப்பு.

— பிள்ளைகளது மணவாழ்வுப் பிரச்னைகள்

முடிந்ததையெல்லாம் செய்து பிள்ளைகளுக்கு மணமுடித்து
வைக்கிறோம்; ஆனாலும் பிரச்னைகள்!

(உ-ம்) ஈசாக்கின் இரு மருமகள்கள்

ஆதி 26:34,35 ... ஏசாவின் ஏத்திய மனைவிகள்

ஈசாக்கோ ஆக்கபூர்வமானவற்றிலேயே கவனம் செலுத்தினான்—

அ) ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள வேட்டைக் கறி
கொண்டுவர ஏசாவைப் பணித்தான் (27:1-4)

ஆ) தனது இனத்தாரிலிருந்தே பெண் எடுக்கும்படி
யாக்கோபுக்கு அறிவுறுத்தினான் (27:46-28:2)

— பிள்ளைகளின் மதிப்பற்ற கவனிப்பு

பவுல் முன்னறிவித்த இறுதிக்கால அடையாளங்களில் ஒன்று:
*''சுபாவ அன்பில்லாதவர்களாய்''* (ரோ 1:31; 2 தீமோ 3:3)

அறிவு கூடுகிறது; அன்பு குறைகிறது.
*''அன்பில்லா அறிவு இறுமாப்புள்ளது''* (1 கொரி 8:1)

நமது இளைஞரில் அநேகர் கணினியில் தேறியவர்கள்;
சுபாவ அன்பிலும், நடைமுறை ஞானத்திலுமோ பூஜ்யம்!

இது முதலாவது பாதிப்பது பெற்றோரைத்தான்.

நீதி 19:26 ... *கொள்ளையடித்துத் துரத்திவிடுகிறவன் ...*
வாழ்வின் எஞ்சிய பகுதியை முதியோர் இல்லத்தில்
செலவிட நேர்ந்தாலும் நொந்துவிடாதீர்.

உங்கள் பணத்தைக் காலியாக்க முயலும் பிள்ளைகளுக்கு
எச்சரிக்கை —

நீதி 28:24 ... *பெற்றோரைக் கொள்ளையிடுவோர்*

சேமிப்பு, சொத்து எல்லாவற்றையும் பிள்ளைகளிடம் சீக்கிரம்
கொடுத்துவிடாதிருங்கள்; உங்களுக்கென்று கொஞ்சம்
வைத்துக்கொள்ளுங்கள்; இதுவே நடைமுறை ஞானம்.

☐ கவலைக்கும் மனத்தொய்வுக்கும் பிற காரணங்கள் —

- பதில்பெறா ஜெபங்கள்
- நிறைவேறா விருப்பங்கள் / கனவுகள்
- தீரா புதிர்கள்
- முடிக்கப்பெறா வேலைகள்

இவைகளால் சந்தேகமும், அவிசுவாசமும்,
நிச்சயமின்மையும், தைரியமிழப்பும் ஏற்படும்.

திருவாக்கு:

சங் 56:8 ... *துருத்தியில் கண்ணீர் ... புத்தகத்தில் ஜெபங்கள்*

நிவாரணம்: *தேவனை ... தேவனை ... தேவனையே நம்பியிரு*

(வச 4,10,11)

ஜார்ஜ் முல்லர் (1805-1898) —

இரு குடிகார நண்பருக்காய் 40 ஆண்டுகள் ஜெபித்தார்.
அவரது அடக்க ஆராதனைப் பிரசங்கத்தில்தான்
அவர்கள் மனந்திரும்பி மிஷனரிகளாய் அயல்நாடு சென்றனர்.

- கடவுளது கடந்த கால ஆசிகளை நினைவுபடுத்துவதினாலேயே மனத்தொய்விலிருந்து வெளிவரலாம் —

ஏசா 46:9,10 ... *நினையுங்கள் ... ஆதி ... அந்தம் ...*

ஆம், எல்லாம் நடப்பது அவரது *"ஆலோசனைப்படியே!"*

கடந்த கால *நன்மைகளை மறவாதிருந்தால்,*
*கழுகுபோல் நமது இளமை பொலிவுறும் —*
சங் 103:1-5

உங்கள் நாட்குறிப்பேடுகளைப் (diaries) புரட்டிப்பாருங்கள்!

சிலுவைகளையல்ல, சிறப்புகளை எண்ணுங்கள்;
இழப்புகளையல்ல, இருப்பவைகளை எண்ணுங்கள்;
சொத்துக்களையல்ல, சொர்க்கத்தை எண்ணுங்கள்;
உங்களையல்ல, உண்டாக்கினவரையே எண்ணிப்பாருங்கள்!

முதியவர் ஒருவரின் மனவுறுதி:

தலைமயிர் நரைத்தால் என்ன?
படிக்கட்டில் தள்ளாடினால் என்ன?
இளைஞர் முந்திச் சென்றால் என்ன?
கண்ணாடியில் எப்படித் தெரிந்தால் என்ன?
இறைமுகம் தரிசித்துப் பூத்துக் குலுங்க
வேரூன்றிக்கொண்டுதானே இருக்கிறேன்?

கடவுளைத் துதித்துக்கொண்டே வாழுங்கள் —

சங் 104:33,34 ... *உயிரோடிருக்குமளவும் பாடுவேன் ...*

*கர்த்தருக்குள்* ***மகிழுவேன்!***

இயேசுவின் அறிக்கையே உங்களுடையதாகட்டும் —

அப் 2:25-28

*கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன் நிறுத்தி ... மகிழ்வு ...*
*நம்பிக்கை ... பாதாளத்தில் விடீர்!*

உங்களுக்கு ''இல்லாத'' துன்பங்களுக்காய்க் கர்த்தரைத் துதியுங்கள்!

■ வேதநாயகம் சாஸ்திரியாரது (1774-1864) பாடல்:

*இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த*
*எண்ணமாய் ஸ்தோத்திரிப்போமாக!*

*பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,*
*பரம பாதையைத் தொடர்ந்தோம்;*
*வலிய தீமையை வென்றோம்,*
*நலியும் ஆசையைக் கொன்றோம்,*
*வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;*
*கலி என்ற தெல்லாம் விண்டோம்,*
*கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்;*
*காய்ந்த மனதொடு பாய்ந்து விழுகணம்*
*சாய்ந்து கெடவும், ஆராய்ந்து நெறியுடன் —*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 363)

## 6. தற்கொலை செய்ய நினைக்கவே கூடாது.
Do not ever contemplate suicide.

- முந்திய அத்தியாயத்தில் மனத்தொய்வு குறித்துப் படித்தோம்;
இதைச் சரிவரக் கையாளாவிடில்,
"தற்கொலையே" மேல் என்றெண்ணுகிறான் மனிதன்.
இதைக்குறித்துத் திருமறை சொல்வதென்ன?

- தற்கொலை கூடாதென்ற நேரடிப் போதனை வேதத்திலில்லை;
ஆனாலும், "தற்கொலை திருச்சித்தமேயன்று" எனப் போதிக்கும்
எடுத்துக்காட்டுகளும் தத்துவங்களும் அதிலுண்டு.

  - ☐ முதலாவது, சில **எடுத்துக்காட்டுகள்:**

— அபிமலேக்கு (நியா 9:50-57)
இஸ்ரவேலில் 3 ஆண்டு ராஜாவாயிருந்தான்.
துன்மார்க்கத்தின் விளைவே அவனது தற்கொலை.

— சவுலரசன் (1 சாமு 31:4; 1 நாளா 10:4)
புத்தி இழந்து, நிலை தடுமாறியபோது நடந்தது.

— அகித்தோப்பேல் (2 சாமு 17:23)
தாவீதுக்கு எதிரான அவனது சதி தோல்வியுற்றபோது
தூக்கிலிட்டுக்கொண்டான்.

— சிம்ரி (1 இரா 16:17-20)
இரதங்களின் தளபதி:
கடவுளுக்கு விரோதமான தனது செயல்களைத் தொடர்ந்து
தன்னையே எரித்துக்கொண்டான்.

புதிய ஏற்பாட்டில் ஒரேயொரு எடுத்துக்காட்டுதான்:
— யூதாஸ்காரியோத்து (மத் 27:5)
குற்றவுணர்வு தாங்காது தூக்கிலிட்டுக்கொண்டான்.
இயேசு அவனைக் *"கேட்டின் மகன்"* என்றார் (யோ 17:12)

அப்போஸ்தலன் பேதுருவின் விமர்சனம்:

*“இழந்துபோன அப்போஸ்தல ஊழியம் ...”* (அப் 1:24)

மேற்குறிப்பிட்ட எவரும் தற்கொலை செய்துகொண்டபோது
“பக்தியுள்ள” நிலையிலிருக்கவில்லை.

**மட்டுமல்ல,** பக்தியுள்ளவன் எவனும் தற்கொலை செய்ததாக விவிலியத்தில் சான்றில்லை.

— இஸ்ரவேலரை ஆசீர்வதிக்கையில் பிலேயாம் சொன்னது:

*“நீதிமான் மரிப்பதுபோல் மரிப்பேனாக;*
*எனது முடிவு அவனது போன்றிருப்பதாக!”* (எண் 23:10ஆ)

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளைப் பார்க்குங்கால்,
தற்கொலை எவ்விதம் ஒரு தீர்வாக முடியும்?

— *“பரிசுத்தரின் மரணம்” கர்த்தர் பார்வையில் அருமை* (சங் 116:15)
இது தற்கொலையாய் இருக்கமுடியாதே!

☐ அடுத்து, தற்கொலை குறித்த வேதத் **தத்துவங்கள்:**

— 10 கட்டளைகள் கொடுக்கப்படுமுன்னரே,
எவரது உயிரையும் எடுப்பதற்குக் கடவுள் எதிராயிருந்தார்:

ஆதி 9:6 ... காரணம்: *தேவ சாயல்*
பின்னர் யாத் 20, *“கொலை செய்யாதிருப்பாயாக!”*

இது அடுத்தவரைக் கொல்வதுதானென்று வாதிடலாம்;
எனது “சொந்த” உயிரை அழித்துவிட எனக்கு உரிமையில்லையோ?

இல்லை, ஏனெனில் நாம் நமக்குச் சொந்தமல்ல —

1 கொரி 6:19,20 ... *விலைக்கு வாங்கப்பட்டீர்கள் ...*
*உடலினாலும் ஆவியினாலும் தேவனுக்கு மகிமை ...*
“உடல்”தான் முதலில் வருகிறது!

*“நீயுனக்குச் சொந்தமல்லவே”* (பாடல் — பக்கம் 772)

2 கொரி 5:10 ... *உடலில் செய்த நல்லது ... தீயது ... நியாயாசனம்*

— திருமறை போதிப்பது:

*நமது காலங்கள் ''கடவுளது'' கரத்தில்* (சங் 31:15அ)

அவற்றை ''நமது'' கரங்களில் எடுத்துக்கொள்ளமுடியாது.

— வாழ்க்கை என்பது முழுக்க முழுக்கக் ''கடவுளது ஈவு;''

*''எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்கிறார்!''*

நமது வாழ்க்கைக்கு எதை, எப்பொழுது செய்யவென்று அவரறிவார்.

அது அவருக்கே உரிய உரிமை! அவரது ஏகாதிபத்திய சித்தம்!

பிர 3:11-13

☐ பைபிளிலுள்ள இந்த எடுத்துக்காட்டுகள் மற்றும் தத்துவங்களின் அடிப்படையில் நமது முடிவு —

''தற்கொலை கடவுளுக்குமுன் முற்றும் தவறு!''

நாட்டின் சட்டமும் அதற்கு எதிரானதே.

■ அதே வேளையில்,

சாக விரும்புவது அசாதாரணமல்ல :

— மோசே (எண் 11:15)

இறைச்சியை மக்கள் கேட்டபோது,

அவனது பணியை ''மிஞ்சிய பாரமாய்'' கண்டான்.

— எலியா (1 இரா 19:4)

யேசபேலுக்கு அஞ்சி உயிர்தப்ப ஓடி

சூரைச் செடியின்கீழ் உட்கார்ந்திருந்தபோது ...

பாருங்களேன், இரு பிரபலத் தீர்க்கர்கள்!

அவர்களது வேண்டல்களைக் கடவுள் கேட்கவில்லை!

மாறாக,

மோசேயைக் கடவுளே அடக்கம்பண்ணினார்!

எலியாவை மரணமின்றி அழைத்துக்கொண்டார்!

— யோபு (யோபு 7:15,16)

*''வாழ்க்கை வெறுத்துப்போயிற்று!''*

(யோபுவின் புத்தகத்தில் மரணம் பற்றி நிறைய குறிப்புகள் — 3:21,22; 6:11; 10:18,19)

யோபுவின் தாங்கொண்ணா வேதனையே அவன் மரணத்தை விரும்பியதற்குக் காரணம்.

— எரேமியா (எரே 20:14-18)

தனது பிறந்தநாளைக்கூட சபித்தான்:

*''கருவிலேயே கடவுள் என்னைக் கொல்லாததேன்?''*

அவனது செய்தி கடுமையாயிருந்ததால் அவனது ஊழியம் படிப்படியாய்ப் பிரபலம் இழந்ததே காரணம்.

— யோனா (யோனா 4:8)

ஆமணக்குச் செடி காய்ந்துபோனபோது

அனல்காற்றில் தலை வெடிப்பதுபோலாயிற்று.

■ இந்த மனிதரெல்லாம் சாவை ''விரும்பினர்,''
தற்கொலை செய்யவோ ''முயலவில்லை.''
தற்கொலை எண்ணம் பிசாசு தருவது —
(உ-ம்) மத் 17:15,18 (வலிப்பு) ... *தீ ... தண்ணீர் ...*
மிருகங்களைக்கூட பிசாசுகள் தற்கொலைக்கு நடத்தும்.
(லூக் 8:30,33) ... *''பன்றிகள் ... மூழ்கின''*

■ தற்கொலை எண்ணத்தைப் பிற சோதனைகள் போலவே பாவிப்பீர்!

☐ பேதுரு, யூதாஸ், இருவருமே பாவம்செய்தனர்.
இருவருமே பெரிதும் மனம் வருந்தினர்.
ஒருவன் கண்ணீரோடு இயேசுவிடம் திரும்பினான்;
மற்றவனோ தன்னையே மாய்த்துக்கொண்டான்.
என்ன பாவமாயிருந்தாலும், கடவுளிடம் திரும்புங்கள்;
இரங்குவதில் அவர் பூரணர்.
''வாழ்வும் மாள்வும்'' நமக்குமுன்;
வாழ நினைத்தால் வாழலாம்! (உபா 30:19)

☐ ஒருவேளை உடலையே உருக்கும் நோயால் நீங்கள்
அழுந்திக்கொண்டிருக்கலாம் —

யோபுவின் வார்த்தைகளை நினையுங்கள் :

யோபு 19:25-27 ... *தோல் ... சதை ... என் கண்கள் ...*

*''என் நெஞ்சம் அதற்காய் ஏங்குகிறது!''* (வச 27)

இதுவே பரிசுத்தவான்களின் ''ஏக்கம்'' —

2 கொரி 5:1-3 ... *மண்ணுலகக் கூடாரம் ...*

*விண் வீடு ... தவிக்கிறோம் ...*

☐ வேலையில், தொழிலில் தோல்வியா? —

(உ-ம்) பிலிப்பி நகர் சிறையதிகாரி (அப் 16:23-34)

*''உனக்குத் தீங்கு செய்துகொள்ளாதே!''* (வச 28)

... உரத்த குரல்!

முழுக்குடும்பத்திற்கும் அது ''இரட்சிப்பாய்'' முடிந்தது!

■ சாட்சியாபுரம், தேவசகாயம் உபாத்தியாயரது (1830-1900) பாடல் —

*நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,*
*நீயுனக்குச் சொந்தமல்லவே!*

*நீயுனக்குச் சொந்தமல்லவே,*
*நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்.*

*பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகை விட்டுப்*
*பிரியினும் அவர்க்கே மரிப்பாயே;*
*உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்,*
*உயர்பதவியில் என்றும் நிலைப்பாய்.*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 152)

(பார்க்க: பக்கங்கள் 700-703)

## 7. சோம்பலுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது.
Do not become lazy.

- வயது செல்லச் செல்ல வேகம் குறைவது இயல்புதான்;
வேகம் குறைவதோ சோம்பலுக்கு நடத்திவிடக்கூடாது.
''சோம்பேறியின் மனது பிசாசின் பட்டறையாகிவிடும்!''

- முதிர் வயதிலும் விறுவிறுப்பாயிருந்த பலரது எடுத்துக்காட்டுகள் பைபிளில் உண்டு —

  - ☐ நோவாவைக் கடவுள் பேழை செய்ய அழைத்தபோது அவனுக்கு 500 வயது தாண்டிவிட்டது (ஆதி 5:32;7:6)
  - ☐ ஆபிரகாமைக் கடவுள் அழைத்தபோது அவன் வயது 75 (ஆதி 12:4)
  - ☐ சீனாயிலிருந்து எகிப்து வந்து தமது மக்களை விடுவிக்கும்படி மோசேயைக் கடவுள் அழைத்தபோது அவன் வயது 80 (அப் 7:23,30)
  - ☐ தனது மகனின் எதிர்ப்பினால் தப்பியோடிக்கொண்டிருந்த தாவீதரசனுக்கு உதவிய பார்சிலா 80 வயதான *''கிழவன்''*
(2 சாமு 19:31-39)

    அவன் தாவீதைப் பாதுகாத்துப் பராமரித்து,
யோர்தானைக் கடக்க வழித்துணையாயிருந்தான் (17:28,29;19:31)

    இதெல்லாம் இந்த வயதில் முடியாதென்றிருந்திருந்தால்,
தாவீதும் உடனாளிகளும் அழிந்திருப்பர்.

  - ☐ வயதானாலும் ஆசாரியப் பணியைச் சகரியா தொடர்ந்தான்
(லூக் 1:7,8)
  - ☐ 84 வயதானாலும் அன்னாள் இறைப்பணியை விடவில்லை —
*''தேவாலயத்தில் இரவும் பகலும் உபவாசித்து ஜெபித்து ...''*
(லூக் 2:36-38)

- ☐ முதிர்வயதிலும் பவுல் மிஷனரிப் பயணங்களைத் தொடர்ந்தான் —
  பிலே 9,22 ... *பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவன் ...*
  ஓய்வெடுக்க *ஓர் அறையை ஆயத்தம்பண்ணு*

- ■ முதிர்வயதிலும் விறுவிறுப்பாயிருந்தோரின் சரிதைகள் சரித்திரத்திலும் நிறையவுண்டு —
  - ☐ மைக்கல் ஏஞ்சலோ 89 வயதிலும் கவிதை இயற்றினார்; கட்டிடப் படங்கள் வரைந்தார். 90 வயதை நெருங்குகையில் சாரத்தின்மீது படுத்துக்கொண்டு மேற்கூரையில் ஓவியம் தீட்டினார்.
  - ☐ வெப்ஸ்டர் 70 வயதில்தான் புகழ்பெற்ற சொல்லகராதி தயாரித்தார்.
  - ☐ 83 வயதில் தினமும் 15 மணி நேரத்திற்குமேல் எழுத முடியவில்லையேயென ஜான் வெஸ்லி சலித்துக்கொண்டார். 86 வயதில் தினமும் இருமுறைக்குமேல் பிரசங்கிக்க முடியவில்லையேயென நொந்துகொண்டார்.
  - ☐ இருதய நோய் மற்றும் பல வியாதிகளிருந்த அன்னை தெரசா 87 வயதில் சாகும்வரை விடப்பட்டோர் மற்றும் நேசிக்கப்படாதோருக்குச் சேவை செய்தவண்ணமிருந்தார்.
  - ☐ தனது 80, 90 வயதிலும் பிராண்ட் அம்மையார் கொல்லி மலைவாசிக் கிராமங்களுக்குத் தூக்கிச்செல்லப்பட்டார்.
  - ☐ ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாகிய எனது தந்தை இறப்பதற்கு முந்திய நாள் வரை பைபிள்கள், பாடல் புத்தகங்கள் விற்றுவந்தார்.
  - ☐ இனி நடக்கவோ, எழுதவோ முடியாதென்பதுவரை எனது தாயார் பல குடும்பங்களுக்காய் ஜெபித்தும், மிஷனரிக் காணிக்கை சேகரித்தும் வந்தார்.

- ■ இறக்கும்வரை சுறுசுறுப்பாயிருக்கவேண்டுமென்பது திருமறையின் தெளிவான அழைப்பு —
  - ☐ பிர 9:10 ... *உன் கைக்கு நேரிடுவது ... பாதாளத்தில் வேலையில்லை*
  - ☐ யோ 9:4 ... *இரவு வருகிறது ... பகலில் நான் பணியாற்றணும்*

☐ 1 கொரி 15:54,55 ... *அழிவுள்ளது ... சாவுக்கேதுவானது ... மரணம்*
*''ஆகையால்''* ... வச 58 ... *இன்னுமதிகமாய்த் திருப்பணி*

ஒருவேளை ஒரு ''நிறுவனத்திலிருந்து'' ஓய்வுபெறலாம்;
இறைப்பணியிலிருந்தோ ஓய்வுபெறுவதேயில்லை!

☐ சங் 71:17,18 ... *சிறுவயது ... முதிர்வயது ... அறிவிக்கும்வரை ...*

☐ பிலி 1:23,24 ... *உடலை விட்டுப் போக விரும்பம் ...*
அதே வேளையில் ஊழியம் தொடர வாஞ்சை!

☐ சிலுவையில்கூட ஆண்டவர் இறையரசிற்கு
ஆள் சேர்த்துக்கொண்டிருந்தார் (லூக் 23:42,43)

☐ ஆத்துமாதாயம் செய்துகொண்டேயிருப்போருக்குத் திருவாக்கு —
தானி 12:2,3 ... *மண் புழுதி ... விண் மீன்கள் ...*

☐ D.L. மூடி (1837-1899) தனது கல்லறையில் பொறிக்கப்பட
விரும்பியது: ''நற்செய்தி சுமந்து விரையும் கால்கள்!''

■ முதிர்வயதிலும் நீங்கள் விறுவிறுப்பாயிருக்கச் சில ஆலோசனைகள் —

☐ வாசிப்பதில் நேரம் செலவிடுங்கள்.

வாசிக்காது அலமாரியில் தூங்கும் எத்தனை புத்தகங்கள்!
பவுல்: *''புத்தகங்களை எடுத்துவா!''* (2 தீமோ 4:6,7,9,13)
ஒலி-ஒளித்தட்டுகளில் இசையும் இறைச்செய்தியும் கேளுங்கள்.
வாசிப்பதைவிடக் கேட்க விரும்பினால் ஒலித்தட்டில் பைபிள்.

ஓர் யூதப் பழமொழி:

அறியாதோர்க்கு முதிர்வயது குளிர்காலம்;
அறிந்தோருக்கோ அது அறுப்புக்காலம்!

☐ உங்களால் முடிந்ததையெல்லாம் எழுதுங்கள்.

— மரணத்திற்குச் சற்று முன்புதான் பிலிப்பியருக்குப்
பவுல் எழுதினான் (பிலி 1:21-25)
அதுவே மகிழ்ச்சியின் நிருபமாயிற்று.

— தீமோத்தேயுவுக்கும் இறக்குமுன்தான் எழுதினான் (2 தீமோ 4:6-8)
அதுவே மேய்ப்பருக்கான நிருபமாயிற்று.

— பேதுருவும் மரணத்திற்குச் சற்றுமுன் எழுதினான் (2 பேது 1:13,14)
அதுவே கள்ள அப்போஸ்தலர், கள்ளப் போதகருக்கெதிரான எச்சரிப்பின் நிருபமாயிற்று.

— யோவான் 90 வயதாகியிருக்கும்போதுதான்
வெளிப்படுத்துதல் புத்தகத்தை எழுதினான்.

— மோசே தனது மரண நாளன்றுதான் உபாகமம் முழுவதையும் பேசினான் (உபா 1:1-4; 31:2; 32:48-52)
*“இன்று நான் 120 வயதுள்ளவன்!”*

— ஏமி கார்மைக்கல் அம்மையார்:
கால் முறிவினால் கடைசி 36 ஆண்டுகள் படுக்கை;
அப்பொழுதுதான் ஆயிரக்கணக்கில் கடிதங்கள்,
13 நூல்கள், நிறைய செய்யுள்கள் எழுதினார்கள்.

— Dr. E. ஸ்டான்லி ஜோன்ஸ்: 80 வயதில் பக்கவாதம் தாக்கியும் “*The Divine Yes*” என்ற தனது கடைசிப் புத்தகத்தை
வரிவரியாய்ச் சொல்லி எழுத வைத்தார்.

இவ்விதம் அனுபவ முதிர்ச்சி, நடைமுறை ஞானத்துடன்
எழுதப்படுபவை தலைமுறைகளை ஆசீர்வதிக்கும்.

☐ இளைஞர், அடுத்தவரிசையினருக்குச் சத்தியங்களைக் கடத்துங்கள்

— யோபு 8:8-10 ... பில்தாத்: ... *விசாரியும் ... ஆராய்ந்துபாரும்*
12:12 ... *முதியோரிடம் ஞானம்*

— *கோபுரங்களை எண்ணுங்கள் ... பின்வரும் சந்ததி* (சங் 48:12-14)
கீழ்க்கண்டவரது இறுதி வார்த்தைகளை வாசியுங்கள் —
மோசே, யோசுவா, யாக்கோபு, சாமுவேல், தாவீது,
இயேசு, பவுல், பேதுரு, ...

— நித்திய சத்தியங்களை மக்கள் மறவாதிருக்க வழிசெய்யப் பேதுரு முயன்றான் (2 பேது 1:13-15)

☐ உங்கள் பணி தொடர ஏற்பாடுகள் செய்யுங்கள்.

— கானானுக்குள் நுழைய மோசேக்கு அனுமதி மறுப்பு;
அடுத்த தலைவனை ஏற்படுத்தி, மக்களுக்கு அறிவுறுத்தினான்
உபா 32:48 முதல் 34:9 வரை

— ஆலயங்கட்ட தாவீதுக்கு அனுமதி மறுப்பு;
கட்டிடப் பொருட்களைச் சேர்த்துவைத்தான் (1 நாளா 22:1-8)
*''இறைச்சித்தம் செய்துவிட்டு ... இறந்தான்!''* (அப் 13:36)

☐ திருப்பணி மற்றும் சமூகக் தொண்டு நிறுவனங்களுக்குத் தன்னார்வலராய் உதவுங்கள்.

☐ முடிந்த வீட்டுவேலைகளெல்லாம் செய்யுங்கள்.

அன்று மாலை அவர் இறந்துவிடுவாரென
அவருக்குத் தெரிந்துவிட்டால் என்ன செய்வாரென
புனித பிரான்சிஸிடம் கேட்கப்பட்டது;
''எனது புல்தரையைச் செதுக்கி முடிப்பேன்'' என்றாராம்!

■ 4ஆம் நூற்றாண்டு புனித பேட்ரிக்கின் இறைவேண்டல் —

இறைவா, என் தலையில் இரும், அறிவில் இரும்;
இறைவா, என் கண்களில் இரும், பார்வையில் இரும்;
இறைவா, என் வாயில் இரும், பேச்சில் இரும்;
இறைவா, என் உள்ளில் இரும், நினைவில் இரும்;
இறைவா, என் முடிவில் இரும், பிரிவில் இரும்!

■ இவ்வத்தியாயத்திலுள்ள தத்துவங்களைப் பின்பற்றினால்,
*முதிர்வயதிலும் கனிதருவீர்கள்!* (சங் 92:14)

உங்கள் ''செயல்கள்'' உங்களைத் தொடரும்;
உங்களுக்கு விருதுகள் பெற்றுத்தரும்!
(வெளி 14:13)

## 8. பரிசுத்தப்படுத்திக்கொள்ளுதலை நிறுத்திவிடக்கூடாது.

Do not stop sanctifying yourself.

- ஜார்ஜ் விட்பீல்டு (1714-1770), வெளிப்பிரசங்க வேந்தர்:

''உன் வாழ்வை நீ பார்த்துக்கொண்டால்,
உன் மாள்வைக் கடவுள் பார்த்துக்கொள்வார்!''

- ஏனோதானோவென்றிருந்தால் பின்மாற்றம் நிச்சயம்.

நன்கு துவங்கி, ஆனால் நன்கு முடிக்காத, அநேக அரசர்கள்,
தலைவர்களைத் திருமறை குறிப்பிடுகிறது —

துக்கமானதோர் எடுத்துக்காட்டு: சாலொமோன்:

1 இரா 11:4 ... *அந்நிய தேவர்களைப் பின்பற்றினான்*

— 85 வயதான ஒரு பிரசங்கியாரிடம் இளைஞர் கேட்ட கேள்வி:
''இச்சையான சோதனைகள் எப்பொழுது தீரும்?''
பதில்: ''அந்த வயது எனக்கு வரும்போது சொல்கிறேன்!''

சோதிக்கப்படமுடியாத முதிர்வயதில்லை.

— C.T. ஸ்டட் (1862-1931), ஆப்பிரிக்கா சென்ற மிஷனரி:
பார்வை மங்கியபோது, கைவிளக்கொளியில்
ஒரு பழைய வேதாகமம் வாசித்துக்கொண்டிருந்தார் ...
''இறைக்கட்டளை எதற்கும் கீழ்ப்படியாது விட்டிருக்கிறேனா
எனத் தேடுகிறேன்!''
(அவரது ஒரு செய்யுள்: பக்கங்கள் 790,791)

— தேவனோடுள்ள நடையில் வளர வளர,
ஒளியானது அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கும் (நீதி 4:18).
அப்பொழுது நமது பாவங்கள், குற்றங்களை, குறிப்பாக,
செய்யவேண்டியதைச் செய்யாதது எனும் பாவங்களை,
தெளிவாய்க் காணமுடியும்.

(உ-ம்) யோபு: துவக்கத்தில் (யோபு 7:20) *''பாவம் செய்தேனோ?''*
முடிவை நெருங்குகையில் (42:5,6 ) —
... *தூளிலும் சாம்பலிலும் மனந்திரும்புகிறேன்.*

■ திருமறையின் அழைப்பு:
எசேக் 18:30-32 ... *''ஏன் சாகவேண்டும்?''*
*''மீறுதல்களை விட்டுத் திரும்புங்கள்''*

மரணமானது பொதுவாகப் பாவத்தின் விளைவு; ஆனாலும், குறிப்பிட்ட பாவத்திற்கான தண்டனையாய் அதைத் தவிர்க்கலாம்.

— சவுலரசன் ... துரோகம் ... கர்த்தர் சொன்னதைக் கேளாமை
(1 நாளா 10:13,14)

— அனனியா-சப்பீராள் ... பணக்காரியத்தில் நேர்மையின்மை
(அப் 5)

— ஏரோதரசன் ... *தேவ மகிமையைத் திருடுதல்* (அப் 12:23)

— கர்த்தரின் பந்தி ... *கர்த்தரது சரீரத்தை நிதானியாமை*
(1 கொரி 11:29,30)

■ வயது கூடக்கூட, நமது தமனிகள் கெட்டியாகும்;
நமது இதயம் அப்படி ஆகிவிடக்கூடாது!

— தாவீதின் விண்ணப்பம்
சங் 39:4 ... *என் முடிவு ... எவ்வளவு நிலையற்றவன் ...*
— எசேக்கியாவின் சாட்சி
ஏசா 38:15-17 ... *கவனமாய்* (softly) *நடந்துகொள்வேன்.*
— எரிச்சலடைதல், குறைகூறல், சகிப்பின்மை, இனிமையிழப்பு ...
இவையெல்லாம் முதிர்வயதின் வெளிப்பாடுகள்.

பழம் பரிசுத்தன் ஒருவரது ஜெபம்:

தேவா, என்னால் மாற்றமுடியாததை
ஏற்றுக்கொள்ளும் சாந்தமும்,
மாற்றக்கூடியதை மாற்றும் தைரியமும்,
இந்த வித்தியாசத்தைப் புரியும் ஞானமும் தாரும்!

- அப்போஸ்தலர் அதிகம் எழுதியது வாழ்வின் மாலைப்பொழுதில்தான். பரிசுத்தமாகுதலை நிறுத்தக்கூடாதென்று அவர்களது கடிதங்களில் முக்கியமாய்க் குறிப்பிட்டனர்.

— யோவான்

1 யோ 3:2,3 ... *இவ்வித நம்பிக்கை ... சுத்திகரிக்கிறான்*

வெளி 22:11ஆ ... *நீதி ... பரிசுத்தம் ... இன்னும் ...*

— பேதுரு

2 பேது 1:4 ... *வாக்குகள் ... திவ்ய சுபாவம்*

:5-7 ... கூட்டுங்கள் + + + + + + +

:10,11 ... *இன்னும் கூடுதல் கவனம் ...*

*இறையரசுக்குள் பிரவேசம் ...*

— பவுல்

2 கொரி 5:8,9 ... *உடலைவிட்டுக் குடிபோக ...*

நோக்கம்: *''கர்த்தருக்குப் பிரியமாயிருக்கணும்''*

1 கொரி 9:25-27 ... *பந்தயம் ... அழியா கிரீடம் ...*

*ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் ...*

1 தெச 5:21-24 ... *சோதியுங்கள் ... விலகுங்கள் ...*

*முற்றும் பரிசுத்தம் ... அப்படியே செய்வார் ...*

- வாழ்வின் இறுதிக்கட்டத்தில் பின்வாங்கிவிடாதீர், கவனம்!

எபி 10:35-39 ... *மனவுறுதி ... பொறுமை ... பின்வாங்கிப்போனால்*

- ஒருவேளை, ஏதோவொரு காரணத்தினால், நீதியின்மேல் பசிதாகம் இழந்திருப்பீர்களானால், கடவுளிடம் கேளுங்கள் —

ஏசா 42:3 ... *நெரிந்த நாணல் ... மங்கியெரியும் திரி ...*

- ஒரு மகிமையான திருவாக்கு:

ரோ 8:30 ... *முன்னறிந்தார் ... முன்குறித்தார் ... அழைத்தார் ...*

*நீதிமானாக்கினார் ... மகிமைப்படுத்தினார்!*

ஏசா 57:2 ... *நேர்மையாய் நடந்தோர் ... இளைப்பாறுதல்*

(பார்க்க: பக்கங்கள் 267-269, 332-334, 540-542)

## 9. மரண பயத்தினால் பீதியடையக்கூடாது.
Do not be horribly afraid of death.

■ மனிதனுக்குப் பயங்களிலெல்லாம் பயம் ''மரண பயம்தான்!''—
விவிலியம் இதை ஆமோதிக்கிறது:

எபி 2:14,15 ... *வாழ்நாளெல்லாம் மரண பயம் ... விடுதலை ...*

கிறிஸ்துவின் பிறப்பும் இறப்பும் இதற்காகத்தான்!

சங்கீதக்காரனும் இதற்கு விலக்கல்ல —

சங் 55:4 ... *வியாகுலம் ... மரணத் திகில் ...*

116:3 ... *மரணக் கட்டுகள் ... பாதாள இடுக்கண்கள் ...*

மரணம்: மனிதனது பார்வை vs. கடவுளது பார்வை: வெவ்வேறு

மனிதன்: மரணம் தவிர்க்கப்படவேண்டியது;
கடவுள்: அது எதிர்பார்க்கப்பட வேண்டியது.

மனிதன்: மரணமானது காரிருள் சூழ்ந்த இரவு;
கடவுள்: அது மகிமையானதொரு புத்தம் புதிய நாள்.

மனிதன்: மரணமானது பயணத்தின் முடிவு;
கடவுள்: அது ஒப்பிலா பயணத்தின் துவக்கம்.

■ மரணத்தைத் திருமறை கண்ணியமாய்க் கையாளுகிறது:
அதைக் ''*கர்த்தர் பார்வையில் அருமை*'' என்கிறது (சங் 116:15)

மரணத்திற்குத் தரப்பட்டுள்ள பல்வேறு ஒப்புமைகள் —

□ தூக்கம்

யோ 11:11-13 ... *லாசரு நித்திரையாயிருக்கிறான்*

1 தெச 4:13 ... *நித்திரையடைந்தோர் ...*

□ கரையை விட்டுச்செல்லும் கப்பல்

பிலி 1:23 ... *விட்டுப் பிரியும் காலம் ...*

2 தீமோ 4:6 ... *எனது புறப்பாடு*

☐ புறப்பாடு / யாத்திரை

லூக் 9:31 ... *எருசலேமிற்குப் போய் ... மரணம்*

2 பேது 1:15 ... *நான் சென்றுபோனபின் ...*

☐ உடை கழற்றுதல் / கூடாரம் விட்டுப் போதல்

2 பேது 1:14 ... *என் கூடாரத்தை விட்டு ...*

2 கொரி 5:1 ... *மண்ணுலகு ... கூடாரம்... வீடு*

☐ விதைத்தல்

1 கொரி 15:42-44 ... *விதைக்கப்படும்... உயிர்பெற்றெழும்*

எனவேதான், மரண அறிவிப்பைக் கிறிஸ்தவர்கள்
''மகிமைக்குள் பிரவேசித்தல்'' என்கின்றனர்!

☐ மரணமென்றால் வெளிச்சத்தை அகற்றுதல் அல்ல;
விடிந்துவிட்டதால் விளக்கை அணைப்பதாம்!

☐ *மோட்சப் பிரயாணம்* எழுதிய ஜான் பனியன் (1628-1688):
''சிறையிலிருந்து சிம்மாசனத்திற்குப் பாதையே மரணம்!''

■ தெரியா எதிர்காலமே மரண பயத்திற்குக் காரணம்.
இனிவரும் வாழ்வை நம்புவதே மரணத்திற்குப் பொருள்தரும்.

கிறிஸ்தவ விசுவாசிக்கு இனிவரும் வாழ்வு குறித்த
சில வேதப் பகுதிகள் —

☐ பல உன்னத வெளிப்பாடுகளுக்குப் பின்னரும் சில காரியங்கள்
தானியேலுக்குப் புரியவில்லை — தானி 12:8,9
ஆனாலும் சமாதானத்துடன் நித்தியத்திற்குள் நுழையும்படி
அவனுக்குச் சொல்லப்பட்டது (வச 13).

☐ நமது உடல் மண்ணுக்கும், ஆவி விண்ணுக்கும் செல்கின்றன!

பிர 12:7 ... *தன்னைத் தந்த தேவனிடம் ...*

☐ *அழிவுக்குரியது* ⏩ *அழிக்கமுடியாதது*

1 கொரி 15:42-44

*அழிவுக்குரியது* ⏩ *அழியாதது*

*மதிப்பற்றது* ⏩ *மகிமைக்குரியது*

*வலுவற்றது* ⏩ *வலுவுள்ளது*

*மனித இயல்பு உடல்* ⏩ *ஆவிக்குரிய உடல்*

*மண்ணைச் சார்ந்தது* ⏩ *விண்ணைச் சார்ந்தது* (வச 48,49)

என்னே விளக்கம்!

☐ கிறிஸ்து பரமேறியது

தமது பிதாவின் வலப்பக்கம் உட்கார மட்டுமல்ல,

நமக்கு ஓரிடத்தை ஆயத்தம்பண்ணவும்!

புரிந்து ஆழ்ந்த உணர்வுகளுடன் அவர் சொன்னது —

யோ 14:1 ... *உங்கள் இதயம் கலங்காதிருக்கட்டும்* ...

:2 ... *அப்படியில்லாதிருந்தால்* ...

:3 ... *நானிருக்குமிடத்தில் நீங்களும்* ...

☐ இதையே பவுல் வியந்து கூறுகிறான் —

1 கொரி 2:9 ... *கண்* ... *காது* ... *இதயம்* ...

:10 ... *தேவனோ வெளிப்படுத்தியுள்ளார்* ...

இவ்வெளிப்பாட்டில் ஒரு பகுதி வெளிப்படுத்துதலில் உண்டு.
கடவுள் ஆயத்தம்பண்ணியதை நாம் நேரில் பார்க்கும்போதோ,
''இதில் பாதிகூடக் கேள்விப்படவில்லையே''
என்று சேபா ராணியைப்போல்தான் வியப்போம்!

*''இப்பொழுது குறைந்த அறிவு, அப்பொழுதோ ...''*

1 கொரி 13:12ஆ

☐ உலகு நமக்குப் ''பிரிவுபசாரம்'' கொடுக்கையில்,

''வரவேற்பு'' வார்த்தைகளுடன் இயேசு அங்கே நிற்பார்!

மத் 25:34 ... *ஆசீர்வதிக்கப்பட்டோரே, வாருங்கள்* ...

இவ்வரவேற்பு ஸ்தேவானுக்கு அளிக்கப்பட்டது —

அப் 7:55 ... அவன் ஓர் அப்போஸ்தலன்கூட அல்ல (அப் 6:5)!

இவ்வரவேற்பு தேவப்பிள்ளை ஒவ்வொருவருக்குமுண்டு!

☐ இதுவே பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தரின் ஏக்கம் —

சங் 73:24,25 ... *மகிமையில் ஏற்றுக்கொள்ளும் ...*

*உம்மையல்லால்*

Fanny Crosby (1823-1915) அம்மையார்:

பிறந்து சில வாரங்களில் தவறான சிகிச்சையினால் பார்வையிழப்பு—

பார்வையடைய விருப்பமா எனக் கேட்கப்பட்டபோது,

அவர்களது பதில்: ''நான் பார்க்க விரும்பும் முதல் நபர் இயேசுவே!''

விடுமுறை வேதாகப் பள்ளி (VBS) பல்லவி:

*Heaven is a wonderful place;* *பரலோகம் இன்ப நாடாம்;*

*Filled with glory and grace;* *மகிமை கிருபையுண்டாம்;*

*I want to see my Saviour's face;* *என் நேசர் முகத்தை நான் தரிசிப்பேன்;*

*Heaven is a wonderful place!* *பரலோகம் இன்ப நாடாம்!*

சுவிசேஷகர் D.L. மூடி (1837-1899):

*மண்ணுலகு பின்வாங்குகிறது;*

*விண்ணுலகு வா வா என்றழைக்கிறது;*

*இதுதான் நான் முடிசூட்டப்படும் நாள்;*

*ஆ, மரணம் எவ்வளவு இனிமை!*

☐ இந்த ஆசிகளுக்கெல்லாம் ஆவியானவரே *''உத்தரவாதி:''*

2 கொரி 5:5

*''உத்தரவாதம்''* = மொத்தத் தொகை செலுத்தியாயிற்று.

பின்னணி: தச்சன் ... வெட்டிய மரம் ... கடல்வழி அனுப்புதல்

■ தாவீது: சங் 23:4 ... *மரண இருள் ... நீர் என்னுடன் ...*

மரணப்படுக்கையில் ஜான் வெஸ்லி:

''கடவுள் நம்மோடிருக்கிறார்; அதுவே போதும்!''

■ இந்த அறிவுடன்தான் பவுல் இவ்விதம் முழங்கினான் —

பிலி 1:21 ... *கிறிஸ்து எனக்கு வாழ்வு; சாவு எனக்கு லாபம்!*

:23 ... *கிறிஸ்துவுடனிருப்பது ...* ***மிகச் சிறந்தது!***

■ நமது ஆவியைத் திருக்கரங்களில் ஒப்படைத்துவிடவேண்டும் —

☐ இயேசு: *''பிதாவே, என் ஆவியை உமது கைகளில் ...''*
(லூக் 23:46) ... *''மிகுந்த சத்தமாய்''*

☐ ஸ்தேவான்: *''இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்!''*
(அப் 7:59)

☐ மார்ட்டின் லூத்தரின் இறுதி வார்த்தைகள்:
மும்முறை சொன்னார்: ''உமது கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்; சத்திய தேவனே, என்னை மீட்டீரே!''

Fanny Crosby அம்மையாரின் பாடல் — *"Blessed Assurance"*

*மெய்ச் சமாதானம் ரம்மியமும்,*
*துய்ய தேவாவி வல்லமையும்,*
*புண்ணிய நாதர் தந்துவிட்டார்;*
*விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்!*

■ **கூடுதல் சிந்தனைகள்**

☐ சரியாய்ச் சொன்னால், கிறிஸ்தவன் எதிர்நோக்குவது மரணமல்ல, *''ஆனந்த நம்பிக்கை''* (தீத் 2:13; 2 தீமோ 4:6-8)

☐ நாம் பொதுவாய் இவ்விதம் வேண்டலாம்:
*''தேவனே, பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும்!''*
சங் 102:23,24

☐ மரணத்திற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த பவுல் சொன்னது:
*''மரணமே, உன் கொடுக்கு எங்கே?''* (1 கொரி 15:54,55)

☐ *''மரணமும் பாதாளமும்''* கிறிஸ்துவைப் பிடித்துவைக்க முடியாததுபோல், நம்மை அங்கங்களாய்க் கொண்டிருக்கும் அவரது உடலாகிய சபையையும் அவை மேற்கொள்ளமுடியாது
(அப் 2:24-28 / மத் 16:18)

☐ மரணமடைய பீதி என்றால் கடவுளோடுள்ள உறவில்தான் கோளாறு!

☐ மரணத்தைப்பற்றிய கவலை அல்ல, அடுத்த வாழ்வைப்பற்றிய கரிசனையே தேவை (லூக் 12:4,5).

## 10. நம்பிக்கையில்லாமல் துக்கிக்கக்கூடாது.

Do not grieve without hope.

- முதல் 9 பாடங்களும் இறக்கவிருப்போருக்கு;
  இந்த 10ஆம் பாடம் **இழக்கக் கொடுத்தோருக்கு.**

- இறந்தோருக்காய்த் துக்கிப்பது தவறேயல்ல.

  புலம்புவதைத் திருமறை கண்டனம் செய்யவேயில்லை —

  - ☐ ஆபிரகாம் தன் மனைவிக்காய்ப் புலம்பினான் (ஆதி 23:2)
  - ☐ யோசேப்பு தன் தந்தைக்காய்ப் புலம்பினான் (ஆதி 50:1,7)
  - ☐ தாவீது தனது மகன் அப்சலோமிற்காய் ... (2 சாமு 18:33-19:1)
    அவனது உள்ளக் குமுறலைப் பாருங்கள்.
  - ☐ தமது உடனாளி திருமுழுக்கினன் யோவானுக்காய்த் துக்கிக்க
    இயேசு தனியிடம் சென்றார் (மத் 14:12,13)
  - ☐ தமது நண்பன் லாசருவுக்காய் *''இயேசு கண்ணீர் விட்டார்''*
    அவனை எழுப்பப்போவது தெரிந்திருந்தும்! (யோ 11:35)
  - ☐ ஸ்தேவானுக்காய்ச் சபை புலம்பியது (அப் 8:2)
  - ☐ எப்பாபிரோதீத்து இறந்திருந்தால்,
    பவுலுக்குத் *''துக்கத்தின்மேல் துக்கம்தான்''* (பிலி 2:27)

  ''நமது'' இழப்புக்காய் மட்டுமல்ல,
  அழுகிறவர்களுடனும் அழவேண்டுமாம்—
  ரோ 12:15ஆ ... ''உங்களுக்கு விசுவாசமே இல்லையா?''
  என்றெல்லாம் கேட்டுக் குற்றப்படுத்தாதீர்.

- ஆனாலும் *''**நம்பிக்கை** இல்லாது''* துக்கிக்கக்கூடாது —
  இதில் பவுலின் குறிப்பான போதனை:

  1 தெச 4:13 ... *நம்பிக்கையின்றி ... துக்கித்து ... அறிவின்றி ...*

  ''அறியாமையை'' அகற்ற ''அகத்தூண்டலான தகவல்'' தருகிறான்
  :14 ... *இயேசுவானவர் எழுந்தபடியே ...*

இது ஒரு கற்பனை அல்ல,

*''கர்த்தரது வார்த்தையின் அடிப்படையில்''* பேசுகிறான் (வச 15)

வச 16 ... கர்த்தரின் வருகை ...

களிப்பு ... கொண்டாட்டம் —

*''ஆரவாரம் ... பிரதான தூதனின் சத்தம் ... எக்காளம்''*

வச 17 ... உயிரோடிருக்கும் பரிசுத்தர் எடுத்துக்கொள்ளப்படல்

***''எப்பொழுதும்** கர்த்தருடனிருக்க ...''*

வச 18 ... ***இந்த வார்த்தைகளால்** தேற்றுங்கள்!*

இதுவே தாவீதரசனின் தீர்க்கதரிசன எதிர்பார்ப்பு —

2 சாமு 12:22,23...*பிள்ளையிடம் நான்...பிள்ளை என்னிடமல்ல*

நிரந்தரமாய்ப் பிற விசுவாசிகளுடன் சேர்ந்துவிடத்

தற்காலிகமான பிரிவே விசுவாசிகளின் மரணம்!

■ ''அகால'' மரணமென்றால் துக்கம் இன்னுமதிகம் —

☐ இறைமக்களுக்கு அகால மரணமே கிடையாது.

அவர்களது பணி முடிந்ததும் பரமவீட்டிற்கு அழைத்திடுவார்.

நமது இறப்பு கடவுள் குறித்த நேரத்திற்கு ஒரு நிமிடம்

முந்தியோ பிந்தியோ இருக்காது!

ஏனெனில் *நமது காலங்கள் அவர் கையில்* (சங் 31:15அ)

திருமறை சொல்லுகிறபடி, மோசே இளமையாகவே மரித்தான் —

உபா 34:7 ... 120 வயது ... *கண் இருளடையவில்லை ... பலம்*

ஆனாலும் பணியை முடித்துவிட்டானே!

☐ கடவுள் தமது ஞானம், முன்னறிவின்படி *''தீங்குநாள்''*

வருமுன் நம்மை அழைத்துக்கொள்ளலாம் — ஏசா 57:1,2

■ சிறு பிள்ளைகள் இறந்துவிட்டால் துக்கம் ஆறாது —

(உ-ம்) மத் 2:16 ... *பெத்லகேமிலும் சுற்றுப்புறமெங்கும் ...*

*ஏரோது ... இருவயது ஆண்குழந்தைகள் கொலை*

:18 ... *புலம்பல் ... பேரழுகை ...*

ராகேல் இழந்தது ஒன்றுக்கும்மேல் குழந்தைகள்!

ஆனாலும் இதையறிந்து ஆறுதலடையுங்கள் —
பெற்றோர் கிறிஸ்தவரோ இல்லையோ,
பிள்ளைகள் நேரே பரலோகம் செல்வர்!
மத் 19:14 ... *விண்ணரசு அவர்களுடையது*
18:10 ... *"அவர்களது தூதர்"* எப்பொழுதும் *பிதாமுன்*

■ அடக்கத்திற்குச் சடலம் கிடையாவிடினும் கலங்காதீர் —

☐ வெளி 20:13அ ... *சமுத்திரம் ... மரித்தோரை ஒப்புவித்தது*
(அக்காலத்தில் விமான விபத்தெல்லாம் கிடையாதல்லவா?)
☐ இரத்த சாட்சிகள் பலர் உயிருடன் எரிக்கப்பட்டனர் (1 கொரி 13:3)
☐ சில இரத்தசாட்சிகள் கொடிய மிருகங்களுக்கு இரையாயினர்!

■ இறந்தோரோடு தொடர்புகொள்ள முயலாதீர் —

☐ திருமறையில் வெகுவாய்க் கண்டிக்கப்பட்டுள்ளது (உபா 18:11,12)
... *கர்த்தருக்கு அருவருப்பு* ...
☐ நம்மை நடத்தவேண்டியது திருவசனமே (ஏசா 8:19,20)
*தேவன் ... வேதம் ... சாட்சி ... வெளிச்சம் ...*
☐ இறந்தோருக்காய் இறைவேண்டல் கூடாது.
— *ஒரே தரம் இறப்பு, பின் தீர்ப்பு* (எபி 9:27)
— *மரித்தோருக்காய் ஞானஸ்நானம்* (1 கொரி 15:29)
ஓர் எடுத்துக்காட்டு, அவ்வளவுதான், உபதேசமல்ல!
☐ இறந்தோரிடம் வேண்டுதலும் கூடாது.
— கடவுளுக்கும் மனிதருக்குமிடையே ஒரே நடுவர்
1 தீமோ 2:5; 1 யோ 2:1

■ நெருங்கியவர்களின் கல்லறைகளைப் பார்த்துவரலாமா?
பைபிள் இதைத் தடைசெய்யவில்லை.
அவர்களோடு இன்னும் இருந்த தாவீதின் கல்லறையைப்
பேதுரு பெந்தெகொஸ்தே நாளன்று குறிப்பிட்டான் (அப் 2:29)

கல்லறைகளை யூதர் அவ்வப்போது வெள்ளையடித்தனர் —
*"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே!"*

கல்லறைகளைப் பார்த்து வருவதை எதிர்க்கும் பலர்
ஒரு காலிக் கல்லறையைப் பார்க்க, ஆயிரக்கணக்கில் பணம்
செலவழித்து, இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றுவருவது வேடிக்கை!

இறந்தோருக்குக் கல்லறைகளில் எதுவும் படைக்காதீர் — சங் 106:28
இது அஞ்ஞானம்.

- ஓர் இறைவாக்கு:

''மரணம் விழுங்கப்பட்டபின் கண்ணீர் இராது!''

ஏசா 25:8அ ... *கண்ணீர் யாவையும் துடைப்பார் ...*

வெளி 21:4 ... *கண்ணீர் துடைப்பார் ...*

*பழையவை ஒழிந்தன ...*

*புதிய வானம், புதிய பூமி!*

(பார்க்க: பக்கங்கள் 704-707)